615

தொழில்

INDUSTRY **FORTNIGHTLY**

மாதம் இருமுறை

ஆசிரியர் :
கே. பெருமாள் உடையார்

1—5—58

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 MAY 1958
MADRAS







ALVITONE

(AN IDEAL FOOD BEVERAGE)

Doctors Agree is Good for You & Me.

Prepared under the most hygienic conditions ALVITONE is an ideal food beverage containing concentrates from Almond, Barleymalt, Full-cream Milk and Cocoa. Extra rich in vitamins and calcium, it is an ideal drinking food for invalids and Nursing mothers.

Get a tin today.

ALVITONE LABORATORIES, MADRAS-16.

★

சுவை மிக்கது ! வலிமை தரக்கூடியது ! சோர்வு நீக்கி சுகம் தருகிறது !

ஆல்விடோன்

பாதாம் பருப்பு, பாலாடைக்கட்டி, பார்லிமால்ட், கோகோ முதலிய சிறந்த சத்துள்ள உணவுப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட ஆல்விடோன் ஓர் உயர்ந்த உணவு பானம்.

கால்ஸியத்துடன் உயிர்ச் சத்துக்கள் நிறைந்த ஆல்விடோன் உங்களுக்கு எப்பொழுதும் புத்துணர்ச்சியும் வலிமையும் ஊட்டுகிறது.

இந்தியாவின் திலகமாய் விளங்கும் தென்னகத்தின் ஓர் இணையற்ற தயாரிப்பு ஆல்விடோன்.

ஆனந்தமடைய ஆல்விடோன் அருந்துங்கள் !

ஆல்விடோன் தொழிற்சாலை

சென்னை-16

''அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!''

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 1—5—58	இதழ் 1

நமது குரல்

"தொழில் ஆயிரமாயிரம்செய்வோம்" என்றார் கவியரசர். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தொழில் வளர்த்துப் பெரு வாழ்வு வாழ்ந்தவர்கள் தமிழ் மக்கள் என்பது வரலாறு கண்ட உண்மை.

நாடு அடிமைப்பட்ட இடைக்காலத்தில் தொழில் குன்றியது; வளமை குறைந்தது; வறுமை வளர்ந்தது.

நாலோரும், மேலோரும் செக்கடியிலும், வன்சிறையிலும், வாடி, கண்ணீரும், செந்நீரும் பாய்ச்சியதால் நாடு விடுதலை பெற்றது.

ஆம்! சுதந்திரச் சூரியன் உதித்தான்.

இழந்து போன இடைக் காலத்தை ஈடுசெய்து,முன்னேற்றம் காண இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டம் மேழிச் செல்வத்தை - உணவு உற்பத்தியைப் பெருக்குவதை இலட்சியமாகக் கொண்டது. பெரும் அளவு வெற்றி கண்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இலட்சியம் தொழில் வளர்ச்சி, ஆம்! உழவுக்கும், தொழிலுக்கும் வந்தனை செய்கிறது விடுதலை பெற்ற நாடு இன்று.

நாடு முழுதும். தொழில்கள் பெருகி வரும் இந்நாளில், விடுதலை பெற்ற மக்களின் சாதனைகளை, செயல் திறன்களை எடுத்துரைக்க நல்லதோர் ஏடு தமிழில் இல்லை என்ற குறை உண்டு; அதனைப் போக்கி, நிறைவு காணவே நல்லோரின் வாழ்த்துக்களுடன் "தொழில்" தோன்றுகிறது.

பாட்டாளி மக்கள் முதல் முழக்கம் செய்த மே முதல் நாளன்று உதிக்கும் "தொழில்" உழைப்பையும், செல்வத்தையும் சமமாகப்பாவிக்கும். உழைப்பு இன்றேல் முதல் வாழாது; முதல் இன்றேல் உழைப்பு வளராது. வர்க்கப்போராட்டம் இன்று தேவையில்லை; வர்க்க ஒற்றுமையே தேவை. அமைதியாகச்சேர்ந்து வாழும் சீலம் தான் தேவை. வடக்கும் வாழவேண்டும்; தெற்கும் ஓங்கவேண்டும்.

குடிசைகளிலும்,தெருமுனைகளிலும், சிறுபட்டறைகளிலும், தொழில் கூடங்களிலும் தொன்று தொட்டு நடைபெற்று வரும் சிறுதொழில்கள் நாட்டின் உயிர்; வேலை வாய்ப்புக்கு வற்றாத நல் ஊற்று சிறு தொழில்களின் வளர்ச்சி இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் ஆணிவேர். அரசாங்க உதவிகளுடன் அத்தொழில்கள் வளர்ந்தோங்க நல் வழிகள் கூறும் "தொழில்" தாமும் வாழ்ந்து, உலகையும் வாழ்விக்கும் பாட்டாளி மக்களின் நல்வாழ்வே நமது லட்சியம். "வரப்புயர" என்று அன்று தமிழ் மூதாட்டி வாழ்த்தினாள். "தொழில் உயர!" என்று நாம் வாழ்த்துகிறோம், இதுவே நமது குரல் !

கப்பலோட்டிய தமிழருக்கு அஞ்சலி !

முதன் முதலாக கப்பல் கழகம் நிறுவி இழந்த கடலாட்சியை இந்தியர் மீண்டும் பெற வழி கோலிய தலைவர் வ. உ. சி. அவர்களது திரு உருவப் படத்தை வெளியிட்டு அஞ்சலி செலுத்துவதில் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகிறோம்! கடலாடி வாணிபம் தமிழ் மக்களின் தலையாய தொழில். திரைகடலில் நாவாய் செலுத்தி செந்தமிழர் புகழ் வளர்த்த செய்தொழில் வல்லார் சிதம்பரம் புகழ் வாழ்க !!

K. KAMARAJ
CHIEF MINISTER OF MADRAS

FORT ST. GEORGE
MADRAS



அன்புடையீர்,

விளம்பி ஆண்டு முதல், மாதம் இருமுறையாக "தொழில்" என்னும் தமிழ்ப் பத்திரிகையைத் தாங்கள் தொடங்க இருப்பது அறிந்து மகிழ்ச்சி யடைகிறேன்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு தொழில் முன்னேற்றமும், தொழிலாளர் களின் ஒத்துழைப்பும் இன்றியமையாதவை. இத்துறைகளில் தாங்கள் ஆரம்பிக்கும் "தொழில்" பத்திரிகை சிறந்த சேவை செய்யுமென்பது என் நம்பிக்கை.

பத்திரிகை நல்ல முறையில் வெளிவர எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

தங்கள் அன்புள்ள,

காமராஜ்

M. BHAKTAVATSALAM
HOME MINISTER

" Mallika "
15, WARREN ROAD,
MYLAPORE, MADRAS
Date 8—4—1958

தொழிலே நாட்டு வளர்ச்சிக்குரிய சாதனம். எனவே அதற்கு 'வந்தனை' என்று கவி பாரதி பாடினார். 'தொழில்' ஆசிரியர் தொழிலின் அருமையை நன்கு உணர்ந்தவர். அவர் துணிந்து தொடங்கும் இந்த நன்முயற்சிவெற்றி பெறும் என்று நம்புகிறேன். 'தொழில்' வாசகர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

எம். பக்தவத்ஸலம்.

C. SUBRAMANIAM
MINISTER FOR FINANCE

Fort St. George
MADRAS-9
Apr. 19, 1958.

Dear Sri Perumal Udayar,

I am glad to learn that you are starting a fortnightly magazine called "Thozil" during this month. I hope and trust the magazine will try to bridge the gap existing between the employer and the employee. I wish the endeavour every success.

Yours sincerely,

C. SUBRAMANIAM



Sri K. Perumal Udayar,
Editor, "Thozil"
55, Edapalayam Street, Madras-3.

R. VENKATARAMAN
MINISTER FOR INDUSTRIES
AND LABOUR

FORT ST. GEORGE
MADRAS:
16—4—1958

அன்புடையீர்,

வணக்கம். "தொழில்" மாதமிரு முறைப் பத்திரிகை தமிழ்ப் புத்தாண்டில் ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறித்து மகிழ்ச்சி. தொழில் துறையில் மக்களுக்கு செய்திகளையும், கருத்துக்களையும் நல்ல முறையில் இப்பத்திரிகை பிரசுரம் செய்து, மக்களுக்குப் பயன்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "தொழில்" பத்திரிகை வெற்றிகரமாக நடைபெற பிரார்த்திக்கிறேன்.

தங்களன்புள்ள,

ஆர். வெங்கட்டராமன்.

ஸ்ரீ கே. பெருமாள் உடையார்,
எடிட்டர், தொழில்,
55, எடப்பாளையம் தெரு, சென்னை-3

M. A. MANICKAVELU
MINISTER FOR REVENUE
AND HEALTH

Fort St. George
MADRAS
April, 16, 1958

Dear Sir,

I am glad a fortnightly called "Thozil" will be started. I wish the magazine will be successful and prove useful to the public.

Yours sincerely,

M. A. MANICKAVELU

Sri K. Perumal Udayar
Editor, "Thozil",
55, Edapalayam Street, Madras-3.

P. KAKKAN
Minister for Works

FORT ST. GEORGE
MADRAS-9
22—4—1958.

அன்புமிக்க ஐயா,

வணக்கம். தாங்கள் "தொழில்" என்ற மாதமிருமுறைப் பத்திரிகையை ஆரம்பிக்க இருப்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி. "தொழில்" என்ற தலைப்பைக் கொண்ட இப் பத்திரிகை தொழிலாளர்களுக்கும், பாட்டாளி மக்களுக்கும் நல்ல விதமான கருத்துக்களை எடுத்துக்கூறி, அவர்கள் வாழ்க்கையில் வளமடைவதற்கான வழியினைச் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். தாங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு எனது மனமார்ந்த நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களன்புள்ள,
P. கக்கன்

ஸ்ரீ கே. பெருமாள் உடையார்,
ஆசிரியர், "தொழில்"
55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

LOURDHAMMAL SIMON
MINISTER FOR LOCAL
ADMINISTRATION

Tiruvarangam,
GREENWAYS ROAD;
Madras-28
April 16, 1958.

Dear Sri Udayar,

It gives me great pleasure to know that you are starting a fortnightly called "Thozil". I have no doubt that it will be useful to those interested in cottage industries. I wish the magazine every success.

Yours sincerely,
L. SIMON

Sri K. Perumal Udayar,
Editor "Thozil",
55, Edapalayam St., Madras-3

Deputy Minister, Railways India
புது டில்லி, 16—4—58

அன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு

தாங்கள் "தொழில்" என்னும் மாதமிருமுறைப் பத்திரிகை சித்திரை மாதம் ஆரம்பிக்க திட்ட மிட்டிருப்பது வரவேற்கத்தக்கது. தொழிலாளர்கள். க்ஷேமத்தை பின்பற்றி, அவர்களை நல்வழியில் நடத்தி, தேசத்தின் பெரு நலனை புகட்டி, உற்பத்தியை ஊக்கமாகப் பெருக்கி, தாய் நாட்டின் சிறப்பை மேம்படுத்தி பாரதத்தை உலகிலேயே மகா உன்னத தேசமாக்க வேண்டியது எல்லோருடைய கடமை. கௌதம புத்தர், மகாத்மா காந்தி ஜனித்த புண்ய பூமி இது. சமாதான முறைகளை நாம் என்றும் பின்பற்றிடுவோமாக!

"தொழில்" தேசப்பணியில் நீடூழி ஈடுபட எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
S. V. ராமசாமி

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி

111, மவுண்ட் ரோடு,
சென்னை - 6
11—4—1958

ஸ்ரீ கே. பெருமாள் உடையார்
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.

அன்புள்ள நண்பர் அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் ஆரம்பிக்கப் போகும் "தொழில்" என்னும் மாதம் இருமுறைப் பத்திரிகை, தேசத்தில் புத்துயிர் பெற்று நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வரும் பல ரக தொழில்களைப் பற்றியும்; காங்கிரஸ் சர்க்கார் அத்துறையில் எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றியும் சிறந்த முறையில் மக்கள் அறிந்து கொள்ள உதவியாக இருக்குமென்று நம்புகிறேன்.

பத்திரிகை நாளுக்கு நாள் வளர்ச்சி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

தங்களன்புள்ள,
ராஜாராம்
தலைவர்.

THE HINDU

11th April, 1958.

K. Perumal Udayar, Esq.,
(Alderman, Corporation of Madras),
Editor, " Thozil "
55, Edapalayam Street, Madras-3

Dear Sir,

Thank you for your letter dated 9th April 1958. I am glad to learn that you have completed arrangements for bringing out a fortnightly magazine to serve the cause of Indian industries, particularly Village and Cottage Industries.

I send my best wishes to you and your colleagues.

Yours faithfully,
K. SRINIVASAN

★

கலைமகள்

17—4—58

அன்புடையீர்,

வணக்கம்,

" தொழில் " என்ற பெயரில் பத்திரிகை தொடங்க இருப்பது தெரிந்தது. தங்கள் பத்திரிகை தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்று மேலும் மேலும் சிறந்து விளங்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அன்பன்,
கி. வா. ஜகந்நாதன்

★

கல்கி

14—4—58

அன்புடையீர்,

வணக்கம்.

தமிழ்ப் புத்தாண்டில் துவங்கும் " தொழில் " பத்திரிகை பல்கிப் பெருகி வளர இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஜெயமணி சுப்பிரமணியம்
துணை ஆசிரியர்.

Mrs. P. V. CHERIAN
Mayor

RIPON BUILDINGS,
MADRAS.
16—4—58

அன்புடையீர், வணக்கம்.

விளம்பி ஆண்டில் சித்திரைத் திங்களில் தாங்கள் ஆரம்பித்து நடத்த இருக்கும் "தொழில்" பத்திரிகை, தொளிலாளர்களது முன்னேற்றத்திற்கும் தொழில் வளர்ச்சிக்கும் பெரிதும் தொண்டாற்றும் என்று நம்புகிறேன். தங்களது நன் முயற்சியில் வெற்றி காண, இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புள்ள,

தாரா செரியன்

திருவாளர் கே. பெருமாள் உடையார்,
ஆல்டர்மென்,
சென்னை நகராண்மைக் கழகம,
சென்னை.

மு. வரதராசன்
தமிழ்ப் பேராசியர்

செல்லம்மாள் தெரு
சென்னை - 30
12—4—58

அன்புடையீர்,

"தொழில்" மலரத் தொடங்குவது அறிந்து மகிழ்கிறேன். செய்வன திருந்தச் செய்து மக்கள் முன்னேறுவதற்குத் "தொழில்" தொண்டுபுரிந்து ஊக்க மூட்டி மேன்மேலும் வளர்வதாக.

அன்புள்ள,

மு. வரதராசன்

S. Satchidanandam Pillai, B.A., L.T.
RETD. DISTRICT EDUCATIONAL OFFICER

175-A, Lloyds Road,
Royapettah - Madras - 14
11—4—58

தொழில் என்னும் பெயருடன், ஒருபத்திரிகை - மாதமிருமுறை - வெளிவர ஏற்பாடாகி இருப்பது வரவேற்கத்தக்கதே. இப்பத்திரிகை பெரும் பயன் அளிக்கும் வகையால் இனிது நடைபெற்றுவரத் திருவருள் துணைசெய்வதாக!

ச. சச்சிதானந்தம் பிள்ளை

மட்பாண்டத் தொழிலுக்கு ஒரு காவலன்

(அரசன்)

சுதந்திர நாடுகளில் எத்தொழிலும் வளர்ச்சிபெற ஆவன செய்ய வேண்டியது அரசினர் கடமையாகும். சிறப்பாக புராதனத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இக்காலத்தில் பாதுகாப்பு மிக மிகஇன்றியமையாதது. ஏனெனில் விஞ்ஞானவளர்ச்சியில்நாடு முன்னேறுகின்ற இத்தருணத்தில் புராதனக் கைத்தொழில்கள் நசிந்து போவதற்கான போட்டிகள் அதிகம் ஏற்படுகின்றன. உதாரணமாக-சலவைத்தொழில், மண்பாண்டத் தொழில் போன்ற தொழில்களை யந்திர சாதனங்களாலோ அல்லது போட்டியின் காரணமாகவோ சுலபத்தில் அழித்து விட முடிகின்றது.

மண்பாண்டத் தொழிலை எடுத்துக்கொள்வோமானால் பிற உலோகப் பாத்திரங்களோடுஅத்தொழில்போட்டியிட முடிவதில்லை. மண்பாண்டத்தில் செய்து சாப்பிடுவது நல்லது; உடலுக்கு ஆரோக்கியம் தரவல்லது என்று எத்துணைதான் எடுத்தியம்பினுங் கூட, மக்கள் விலை மலிவாகவும், உடையாமலும் இருக்கக் கூடிய அலுமினியப் பாத்திரங்களைத்தான் உபயோகிக்க முற்படுகின்றனர். ஆனால் இன்றைய நிலையை நோக்குங்கால் எவர்ஸில்வர் (ever silver) சகாப்தமாக விளங்குவது யாவரும் அறிந்ததே. சாதாரணமாக ஒரு ஏழை கூட, தன்வீட்டில் எவர்சில்வர்பாத்திரங்களைச் சமையலுக்கில்லாவிடினும், பண்டங்களை வைத்துக் கொள்ளவேனும் பயன்படுத்துதலை நாம் காண்கிறோம்.

இந்நிலையில் மண்பாண்டத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் அவலநிலையை நாம் எண்ணிப்பார்க்காமல்விட்டுவிடுவதற்கில்லை.

இத்தொழிலை சாதாரணமாக முற்போக்கானயந்திர சாதனங்களால்செய்துமுடிக்கும் அளவிற்கு வளர்ச்சியுறவில்லை.தொழில் நசிந்து கொண்டே வருகிறது. இத்தொழிலில் நல்ல பழக்கமுடையவர்கள் அல்லாது ஏனையோர் இத்தொழிலை சுலபத்தில் செய்வதுஇயலா எனவே, இத்தொழில் ஆக்கம் பெறவில்லை. காரணம் என்ன?

இத் தொழில்ஈடுபட்டுள்ள மக்கள் தொழில் தெரிந்த காரணத்தாலே இத்தொழிலை மேற்கொண்டுள்ளனரே தவிர இத்தொழிலால் நல்ல ஊதியம்கிடைக்கிறது என்ற காரணத்தால்அல்ல.

இவர்கள் உற்பத்திசெய்யும் மண்பாண்டங்களை உற்பத்திசெலவைவிடகுறைந்த விலைக்கேவிற்று விடுகின்ற காரணத்தால், இலாபத்தைக்கொண்டு பொருளாதார முன்னேற்றம்காணாது போகின்றனர். இதற்கு காரணம் இவர்களுக்கு இருக்கக்கூடிய கடன் தொல்லைகளே. கடனை கொடுக்க வேண்டும் என்பதற்காக கைமேல் காசு வந்தால் போதுமென வந்த விலைக்கு விற்று விட்டு, கடனைக் கொடுத்து விட்டு கணக்கற்ற நாட்கள் பட்டினியும், பசியுமாக வதைகின்றனர். இத்தொல்லையினின்றும் இவர்களை மீட்க வழி, இத்தொழிலைக் கூட்டுறவு முறையில் செய்வதேயாகும்.

கூட்டுறவு முறையில் இத்தொழிலைச் செய்தல்வேண்டும் என்ற ஒரு பிரச்சனை எழும்போதுசிலகுறைகளை நாம் போக்கியாக வேண்டியிருக்கிறது.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள், சிதறிக்கிடக்கின்ற காரணத்தால், இத்தொழிலைக்கூட்டுறவுமுறையில் செய்யச் சிரமமாயிருக்கின்றது. மண்பாண்டங்களை, சிதறிக்கிடக்கும் இம்மக்களிடமிருந்துகொள்முதல் செய்து, பிரதமகிடங்கிற்கு எடுத்துச் சென்று, பின் பல்வேறு இடங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பும் போது ஏற்படுகின்ற செலவு சில நேரங்களில் சரக்கின் மதிப்பை விட அதிகமாகி விடக்கூடும். அப்போது வாங்கும் பாரத்தை பொதுமக்கள் தாங்க

வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஏற்கனவே, குறிப்பிட்டது போல் மார்க்கட்டில் நல்லகிராக்கி இல்லாத இப்பாண்டங்களை கூட விலை கொடுத்து மக்கள் ஏன் வாங்கப் போகிறார்கள்? எனவே, விலைமலிவாக விற்றால் தான் இப்பாண்டங்கள் மார்கட்டில்செலாவணியாகும். இதற்கு, இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் தங்கள் தொழில் இயல்வாழ்வைப் பொறுத்த மட்டில் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாக காலனிகளை அமைத்து கொண்டு கூட்டுறவுடன்பிற மக்களிடமிருந்து தனித்து வாழ்வதே சாலச் சிறந்ததாகும்.

பிறமக்களிடமிருந்து தொழில் துறையில் ஏன் தனித்துவாழவேண்டுமென்றால், இத்தொழிலால் பிறர்க்கு இடையூறு நேரும் என்ற காரணத்தால்தான். இப்பாண்டங்களைச் செய்தற்கு முக்கியமாகத் தேவைப்படுவது களிமண்ணாகும். இக்களிமண்ணைச் சேர்த்துவைத்துப்பார்க்கிற ஏனைய மக்கட்கு அருவருப்பாகத்தான் தோன்றும். எனவே இக்காட்சி மற்றவர் கண்களுக்குப் புலனாகா வண்ணம் இருக்க தனிக் காலனி முறையே சிறந்ததாகும்.

அடுத்து இப்பாண்டங்களை வெயிலில் உலர்த்தவும், தீயிலிட்டுசுடவும்பரந்த இடம் தேவைபடுகிறது. இத்தொழில் செய்கிறவர்கள் தங்களை அறியாமலே அண்டையிலும் பக்கத்திலும்உள்ளவர்கள்இடத்தை ஆக்ரமித்துக் கொள்ளுகின்றனர். இதனால், மற்றவர்களோடு மனக்கசப்புக் கொள்ள நேருகிறது, இதனின்றும்மீளதனிக்காலனி முறையே சிறந்ததாகும்.

மூன்றாவதாக, இதனைக் கொளுத்தும்போதும்அந்த சூளையினின்றும் வெளி வரும் புகை, மற்றவர்கள் கண்களில்சென்றுசேர்ந்து அவர்கள் பிறவற்றைபார்க்காவண்ணம் தடுக்கின்றது. இப்புகையானது, உண்மையிலேயே விஷக் கிருமிகளைக்கொல்லும்சக்தி படைத்திருப்பினும், வசதியாக வாழ்கின்றமக்களுக்கு இடையூறாகவே தோன்றுகின்றது. இதனின்றும் அவர்கள்தங்களைக்காத்துக் கொள்ள பொதுசுகாதாரத்தைத் துணைக்கழைக்கின்றனர். அரசினரும் இவர்களுக்கு துணைநின்றுசட்டத்தின் பேரால் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைத் தண்டித்தும், துன்புறுத்தியும் வருவதுடன் இதற்கான (லைசென்ஸும்) அனுமதியும் வழங்க மறுக்கிறார்கள். இதற்கு பரிகாரம் காண வேண்டுமானால் தனிக்காலனி எவ்வளவு இன்றியமையாதது என்பது புலப்படும். நான்காவதாக கூட்டுறவு முறையில் இத்தொழிலை அபிவிருத்தி செய்தற்கு, இத்தொழிலுக்கு மிக அவசியமான மண், மணல், வைக்கோல், வரட்டி, 'சருகு, சுள்ளி, விறகு போன்ற பொருள்களை மொத்தமாக வாங்கி பகிர்ந்து கொள்ள காலனி இன்றியமையாதது.

மேலும் தொழிலின் தரம் வளர்வதற்கும், தொழில் செய்முறை வளர்வதற்கும் காலனி வாழ்க்கை இத்தொழிலாளர்கட்கு மட்டுமன்றி எல்லாவித தொழிலாளர்கட்கும் மிகவும் பயனுடையதாக அமையும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எனவே இத்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்கள் ஆங்காங்குகாலனிகளை சர்க்கார் உதவியுடன் அமைத்துக் கொண்டு தங்கள் தொழிலை கூட்டுறவு முறையில்நடத்துவதுடன், தங்கள் வாழ்க்கையையும் வளம்பெற செய்து கொள்ள பாடுபடவேண்டும்.

புராதன கைத்தொழில்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும் என்று சொல்லி வருகின்ற நம் சர்க்காரும், இத்துறையில் எல்லாத் தொழிலாளர்களுக்கும் குறிப்பாக ஏழைமக்களான மண்பாண்ட தொழிலாளர்களுக்கு எல்லா வசதிகளையும்செய்துகொடுப்பதுடன், அவசியமானால் சுகாதார, கூட்டுறவு சட்டங்களை திருத்தியும் இத்தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்க முன்வர வேண்டும்.

வீணில் உண்டு களிப்போரைப் போற்றாது, உண்மை உழைப்புக்கு மதிப்புத் தரும் நாள் என்று வருகின்றதோ அந்நாள் முதல் இந்நாட்டிற்கு 'எந்நாளும் பொன்னாளாகும்.

●

வாழ்த்து

வித்துவான் S. விசுவநாதன்

பாரதத் தாயின் பொறைவிலங் ககல
ஆராத் துயரம் அனைத்துமே பெற்று
புழுவெனத் துடித்து புழுதியிற் படிந்து
கொழுகொம் பில்லாக் கொடியென அலைந்து
தடியடி பட்டுத் தாரணி எங்கும்
வெடிபட முழக்கி வெற்றியே கொண்டு
சிறையி லிருந்து சீருடன் வந்து
சிறைபட் டிருந்த சீருடைத் தாயின்
விலங்கை அகற்றிய விறல்மிகு மக்களே!
துலங்கிய அறிவும் ஆற்றலும் பெற்று
மன்னுயிர் அனைத்தும் தன்னுயி ரெனவே
எண்ணி அனைத்தை யும்போற் றுவீரே
கல்வி ஞானம் கவின்பெற எய்தி
ஒல்லும் வகையில் ஒற்றுமை யாக
மன்னுமென் மக்காள் மகிழ்ந்தே
வாழ்க வாழ்க வளம்பல பெற்றே.

விளம்பர விகிதம்

ராப்பர் 4-வது பக்கம்	(இரண்டு கலர்)	100—0—0
,, ,,	(ஒரு கலர்)	75—0—0
ராப்பர் உள் பக்கம்		75—0—0
சாதாரண முழு பக்கம்		60—0—0
,, ½ பக்கம்		30—0—0
,, ¼ பக்கம்		20—0—0

காண்டிராக்ட் விளம்பரங்களுக்கு,

அட்வர்டைஸ்மென்ட் மானேஜர்,

"தொழில்"

55, எடப்பாளையம் தெரு, சென்னை-1.

உயர்ந்த ரகம்

உறுதியானவை

" திண்டுக்கல் "

ஸ்டீல் டிரங், சூட்கேஸ், கேபின் ரகங்கள், வாளிகள், விவசாயக் கருவிகள், கீழ் சட்டங்கள், இரும்பு கிராதிகள், நெல் அவியல் டாங்குகள், தண்ணீர் டாங்குகள், தங்களின் ஆர்டரின் பேரில், சுத்தமாக தயாரித்து கொடுக்கிறோம்.

M. கருப்பணன்.

★

சென்னை அரசினர் உதவி பெற்ற

லக்ஷ்மி டிரங்க் டிப்போ

99, மெயின் ரோடு,

திண்டுக்கல்.

புலவர் தொழில்

"ராதா"

தொழில்கள் அனைத்திலுமே சிறந்தது உழவுத் தொழில். இதனை 'வள்ளுவர்' உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார்' என்பதனுல் விளக்கியிருக்கிருர். இதற்கு அடுத்தபடியாக எண்ணப்படுவது ஆசிரியர் தொழில். அதாவது புலவர் தொழில், புலமை இருந்தால் தானே ஆசிரியன் ஆகலாம்!

புலவர் தம் புலமையால் ஊரில் எல்லோருக்கும், உலகத்தவருக்கும் நல்லது கூறல் வேண்டும், நன்மைவிளையவழி கோலவேண்டும், நீதியை நிலைநிறுத்தல்வேண்டும், துன்பத்தைப் போக்கவேண்டும், இன்பம் பயக்கவேண்டும்.

'உவப்பத்தலைக்கூடி உள்ளப்பிரிதல் அனைத்தே புலவர் தொழில்' என்கிருர் பொய்யாமொழி. புலவர்யாவரும்எவரையும் அவர் உவக்குமாறு அவருடன் கூடி, நல்வழி ஒழுகி, உறுதி கூறி, பின் அவரை பிரியநேர்ந்தால்'இனி இவரை யாம் எங்ஙனம் (திரும்ப) கூடுதும்'என்றுநினையுமாறு நீங்குதல் வேண்டும் என்கிருர். அதாவது ஒழுக்கமும், திறம்படக்கூறும் ஆற்றலும் மிக்கிருத்தல்வேண்டும் புலவருக்கு என்கிருர். மற்றும்புலவர்ஒரே இடத்தில் தங்கிவிடாது நாடு நாடாகசென்றுவருதல்வேண்டும் என்றும் தெரிவிக்கிருர்.

எத்தொழிலைச் செய்தாலும் 'திறம்பட' செய்ய வேண்டும். அவ்வாறு செய்வதால் தான் செய்யும் தொழிலுக்கு உயர்வும், தனக்கு புகழும் பெறமுடியும். ஈண்டு உதாரணமாக, புலவ பெருமாட்டி ஔவையாரைப்பற்றி சிறிது தெரிந்து தெளிவோம்.

* * *

ஔவையார் வள்ளுவரின் சகோதரிஎன்பர்சிலர், கம்பன் காலத்தவர் என்பர், சிலர் கடைச்சங்ககாலத்தவர் என்றும் கூறுவர். எனினும், நாம் அவரின் செயல்களை கவனிப்போமாக.

ஔவையார் தமிழ் மக்களின் உள்ளத்தே நீதிப்பண்பை பரப்பியவர். சிறுவர்களும் எளிதில் கற்கும் வண்ணம் சிறு சொற்ருெடர்களால் நூல்கள் ஆக்கியிருக்கிருர். அவர்களின் ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், வாக்குண்டாம், நல்வழி, ஞானக்குறள் என்பவை சாட்சியம் கூறும். இதனுல் அவர் தலைசிறந்த புலவராக-ஆசிரியராக விளங்குகிருர்.

ஒருசமயம் இப்புலவர் தூதுவராக செல்ல நேர்ந்தது. தமிழ் நாட்டில்வாழ்ந்தஅதியமான், தொண்டைமான் என்னும் இரு அரசர்களுக்குள் நிகழயிருந்தபோரைத்தடுக்க வேண்டி, தொண்டைமானிடம் (அதியமானின்) தூதுவராகச் சென்ருர். அவ்வாறு சென்ற ஔவையை அழைத்துச் சென்று தன் ஆயுதச்சாலையைகாட்டினுன். அங்கே ஈட்டி, கேடயம், வாள்கள் இன்னும் பலவனவும் புதுமையாகச் செய்துவைக்கப்பட்டிருந்தன. அவைகளுக்கு மாலைகள்சூட்டப்பட்டிருந்தன இதைக்கண்டஔவைசிறிது சிறிது சிரித்தார். பிறகு தொண்டைமானிடம், "அடடா! உன் படைக்கலச் சாலையிலுள்ள ஆயுதங்கள் அனைத்தும் நல்ல பளபளப்புடன் நெய்பூசப்பெற்று, மயில் பீலி அணிந்துகாவலில் உள்ளன. ஆனல், அங்கே (அதியமானிடம்)எல்லா ஆயுதங்களும் பகைவருடன் பொருதி, நுனிவளைந்து உலைப்பட்டரையில் உள்ளன" என்ருள்.

இதனுல் தன்தலைவனுகிய அதியமானின் மதிப்பைக் குறைக்காது, 'ஓயாது போர் செய்தமையால் மொக்கை போந்த ஆயுதங்கள் சரிசெய்வதற்காக, கொல்லன் பட்டறையில் உள்ளன' என்று சிரிப்பு உண்டாகும்படிச் சொன்னுள். அவன் பெரு வீரன் என்பதைச் சொல்லாது எடுத்துக் காட்டினள்.

அதனையறிந்ததொண்டைமான் புலவரின் புலமையை மெச்சினுன். போர்செய்யும் எண்ணம் விடுத்து அதியமானுடன் நட்புகொள்ள துணிந்தான்.

இவ்வாறு ஔவை தான் எடுத்துக்கொண்ட வேலையை 'தூதுவர் இலக்கணம் தவருது' நின்றுசெய்து முடித்தாள்.

புலவர் பெருமக்கள் எத்தொழிலை மேற்கொண்டாலும் அதைச் செவ்வனே செய்து முடிப்பர் என்பது இதனுல் தெள்ளத் தெரிகிறது அன்ருே!

சென்னை இராஜ்ய சிறு தொழில், வர்த்தக சம்மேளன

விசேஷ மகாநாடு

11—4—58 வெள்ளியன்று மாலை 3 மணிக்கு

சென்னை, செயிண்ட்மேரீஸ் ஹாலில்

K. பெருமாள் உடையார் தலைமை உரை

———

சென்னை இராஜ்ய சிறு தொழில் வர்த்தக சம்மேளன விசேஷ மகாநாட்டிற்குத் தலைமை தாங்கி அதை நடத்திக்கொடுக்க எனக்கு சந்தர்ப்பம் அளித்தற்காக சம்மேளனத்தின் வரவேற்புக் கமிட்டிக்கும், குறிப்பாக மதுரை, ஸ்ரீ S. சூரியநாராயணன் அவர்களுக்கும் திருச்சி, ஜனப். P. H. முகம்மது நஸிருத்தீன் அவர்களுக்கும் குடந்தை, ஜனப். A. முகம்மது இப்ராஹீம்அவர்களுக்கும் P. S. கிருஷ்ணசாமி அய்யர் அவர்களுக்கும் மற்றுமுள்ள நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவந்துள்ள சிறு தொழில் வியாபாரிகளையும் மற்ற சில்லரை வியாபாரிகளையும் சந்திக்கும் அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்கு நான் பெரிதும் மகிழ்ச்சி யடைகிறேன்.

சென்னை அரசாங்கத்தினர் அண்மையில் கொண்டு வந்துள்ள புதிய விற்பனை வரிச் சட்டத்தினல் இந்த இராஜ்யத்திலுள்ள சிறு தொழில்வர்த்தகர்கள்பாதிக்கப்படாமல் இருக்க ஆவன செய்யுமறு சென்னை அரசாங்க மந்திரி சபையினரை இம்மகாநாட்டின் சார்பாக நான்கேட்டுக் கொள்ளுகிறேன்.

உணவு வகைகள், காய் கறி, பழவகைகள், வாழையிலை, வெற்றிலை,தேங்காய், புஷ்பம், உருளைக்கிழங்கு, வெங்காயம், ஆகிய அழுகல் பொருள்களில் வியாபாரம் செய்யும் சிறு வர்த்தகர்களும், நாட்டுச்செக்கு, எண்ணெய் உற்பத்தி, வறு கடலை போன்ற குடிசைத் தொழில் வியாபாரிகளும், இரும்பு-எஃகு சாமான்கள், தீப்பெட்டி ஆகிய சிறு தொழில் வியாபாரிகளும் இந்த சமயத்தில் அரசாங்கத்தாரால் அதிக உதவியும் பாதுகாப்பும் அளிக்கப்பட வேண்டியவர்களாவார்கள் என்பதை நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

சிறு தொகையைக் கொண்டு வாணிபம் செய்யும் சிறு வர்த்தகர்கள் அதன் மூலம் கிடைக்கும் சொற்ப வருவாயைக் கொண்டு தங்கள் குடும்பங்களை நடத்தமுடியாமல் அல்லல்படுகின்றனர் என்பது அனைவரும் அறிந்ததேயாகும். இவர்கள் தங்களுக்கு உதவியாகஇரண்டுஅல்லது மூன்று அல்லது இதற்கு மேலும்ஆட்களைஅமர்த்திக் கொண்டு அவர்களுக்கு மாதாமாதம் சம்பளமும் கொடுத்துக்கொண்டு, தங்களுடையகடைகளுக்கு வாடகையும் கொடுத்துக் கொண்டு, தொடர்ந்து வியாபாரம் செய்வதே பெரிய ஆச்சரியம். இந்நிலையில் இச் சிறு வியாபாரிகளில் ஒருசிலரே எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள். பெரும்பாலும் இவர்கள் எழுத்து வாசனை யில்லாதவர்களே.

ஆனல் அனுபவ ரீதியிலேயே தொன்றுதொட்டு வியாபாரங்களை நடத்திவருகின்றார்கள். இவர்கள்



சென்னை ராஜ்ய சிறு தொழில், வர்த்தகர் விசேஷ மகாநாடு சென்ற 11-4-58-ல் செயின்ட் மேரி மன்றத்தில் திரு. கே. பெருமாள் உடையார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது திரு. சி.ஆர். ராமசுவாமி எம். எல். ஏ. மகாநாட்டைத் திறந்து வைத்தார். மகாநாட்டு கன்வீனர் ஸ்ரீ எஸ். சூரியநாராயணனையும் படத்தில் காணலாம்.

கணக்குப் புத்தகங்களை வைத்துக்கொண்டு கணக்கு எழுதுவதும், வியாபார வரி ஆபீசுக்குச் சென்று கணக்குகளைக் காண்பிப்பதும் கடினம்.

இந்தியாவில் தற்போது பல கனரகத் தொழில்கள் மேம்பாடுடன் வளர்ந்து வருவது நாம் பெருமைப் படவேண்டியவிஷயமாகும். சிறு அளவில் வர்த்தகம் செய்யும் சிறுதொழில் வர்த்தகர்கள் அதைக் கண்டு பொறாமைப் படவில்லை. அதற்கு மாறாக பெருமைப் படுகிறார்கள். என்றாலும், தொழில்கள் தங்கு தடையின்றி எல்லாத் துறைகளிலும் வளரக்கூடிய நிலையில் இருந்தால் தான் அவை சமூகத்திலுள்ள பாமரமக்களுக்கும், பணக்காரர்களுக்கும் நடுத்தர வகுப்பினருக்கும் மிகவும் உதவியாக இருக்கும்; நன்மைபயக்கும் என்பது நம்முடைய அமைச்சர்களும் அதிகாரிகளும் நன்கறிந்த விஷயமாகும். இச்சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன்:

இந்தியாவில் தான் சிறு தொழில்கள் என்றும் கனரகத்தொழில்கள் என்றும் சிறு வியாபாரம் என்றும் பெரிய வியாபாரம் என்றும் பல பாகுபாடுகளுடன் தொழிலும், வியாபாரமும் வளம் பெற்று வருகின்றன. ஆனால் மேனாடுகளில் இந்த பாகுபாடு இல்லாமல்தொழில்கள் வர்த்தகங்களும் அனைத்தும் ஒன்று என்று பாவிக்கப் பட்டு பெருத்த அளவில் வாணிப முன்னேற்றம் காண்கின்றனர். இது நம் நாட்டினர் யாவர்க்கும்தெரியும், நம் நாட்டிலும் இந்த நிலைமை ஏற்படவேண்டும். அப்பொழுது தான் நாட்டிற்கு நல்லகாலம் பிறந்ததென்று சொல்லலாம்.

சென்னை இராஜ்யத்திலுள்ள சிறு தொழில் வர்த்தகர்கள் அனைவரும் கட்சிப் பாகுபாடு இல்லாமல் ஆளும் கட்சியுடன் ஒன்று சேர்ந்து வாழ விருமபுகின்றனர் என்பதை நமது அரசாங்கத்தினருக்கு இச்சந்தர்ப்பத்தில்எடுத்துக் கூற விரும்புகிறேன். சிறு தொழில் வர்த்தகர்களுக்கு அடிக்கடி ஏற்படும் கஷ்டங்களில் தலையிட்டு அவர்களுடைய குறைகளை நீக்குமாறு சென்னை மந்திரி சபையிலுள்ள, சிறு தொழில் வர்த்தகர்களின் குறைகளை நன்குணர்ந்த, தொழில்இலாக்கா அமைச்சரான கனம் R. வெங்கடராமன் அவர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியாவில் தொழில் வளம் அடையப் பெருமுயற்சி எடுத்து வருவதை நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். மக்களுடைய வாழ்வும், சிறுவர்த்தகர்களுடைய வாழ்வும் ஒன்றோடொன்றுபிணைந்து ஒன்றுபட்ட நல்வாழ்வு வாழவேண்டும் என்றே ஒரே சிந்தனையாகஇருக்கும் சிந்தனைச் சிற்பி, சென்னை முதல்

அமைச்சர் உயர்திரு K. காமராஜ் அவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

சென்னை இராஜ்ய சிறு தொழில் வர்த்தகர்கள் பலவிதக்கட்சிப் பிரசாரங்களில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தாமல், மக்களின் நல்வாழ்வும் நாட்டின் நல்வளமும் பெருகப் பாடுபட்டு வரும் இந்தியதேசியக் காங்கிரஸின் ஆதரவும், ஆளும் கட்சியினுடைய ஆதரவும் தங்களுக்குத் தேவை என்பதை உணர்வார்கள் என்று நான் நம்புகிறேன். இவர்கள் தங்களுக்குள் எவ்வித கருத்து வேறுபாடுமில்லாமல் ஒன்றுபட்டு வாழவேண்டும். கடையடைப்பு முதலிய விரும்பத்தகாத செய்கைகளில் ஈடுபடுவது பொதுஜன அதிருப்திக்கும் அரசாங்கத்தின் மனஸ்தாபத்துக்கும் தான் வழிகோலுவதாகும். அதனால் இந்தமாதிரிச் செய்கைகளில் ஈடுபடாமல், நாம் யாவரும் சுமுகமான முறையில் நம் குறைகளை அரசாங்கத்துக்கு எடுத்துரைத்து அவைகளுக்குரிய நிவாரணம் தேடவேண்டும்.

நம் போன்ற சிறு வியாபாரிகளின் கஷ்ட நஷ்டங்களை உத்தேசித்தே கனம் வியாபார அமைச்சர் அவர்கள் விற்பனைவரி மாறுதலை அமல் செய்வதை ஒரு வருஷத்துக்குத் தள்ளிப் போட்டிருக்கிறார் என்று நன்றாகத் தெரிகிறது. அவருடைய நற்செய்கையை நாம் வரவேற்கிறோம். ஆனால் அதே சமயத்தில் நம் குறைகளையும் நன்றாக அறிந்து நமக்கு இந்த மாறுதலினால் ஏற்படக்கூடிய சங்கடங்களிலிருந்து நிரந்தர நிவாரணம் அளிப்பதற்குரிய வழிவகைகளையும் வகுத்தருளுமாறு மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறு வர்த்தகர்களுக்கு இடையிலே ஏற்பட்ட இன்னல்கள் அகன்று, அவர்கள் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெற்று, இனிது வாழ எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளைப் பிரார்த்தித்து என்னுடைய தலைமையுரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

GANESH STORES

28-B, KHAN MARKET,

NEW DELHI.



Place for best, South Indian goods, such as Coffee (raw, roast & ground), provisions like Nellore rice and other commodities.

Our motto is best service and customers' satisfaction.

P. KRISHNAMOORTHY IYER;

Manager.

மகாநாட்டு நிகழ்ச்சிகள்

—:✿:—

விற்பனை வரி மசோதா கொண்டு வரும் விஷயத்தில் அரசாங்கத்தார் அவசரப் பட்டுஎதையும் செய்ய மாட்டார்கள். தற்போதுள்ள விற்பனைவரி முறையே சிறந்தது. அதுவேபோதும் என்று வர்த்தகர்கள் சொன்னாலும் அவ்வாறே அரசாங்கம்விட்டு விடும் என்று தாம் நம்புவதாகவும் சட்டசபை காங்கிரஸ் மெம்பர் திரு. சி. ஆர். ராமசாமி தமிழ்நாடு சிறு தொழில் வர்த்தகர்கள் சம்மேளன விசேஷ மகாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் கூறினர்.

சம்மேளனத் தலைவரும் கார்ப்பரேஷன் ஆல்டர்மேனுமான திரு. கே. பெருமாள் உடையார் இம்மகாநாட்டுக்குத்தலைமை தாங்கினர். தமிழகத்தின் பல்வேறு ஜில்லாக்களிலுமிருந்து பல வர்த்தக சமூகப் பிரதிநிதிகள்வந்திருந்தனர். திரு. வி. சுப்பா நாயுடு எம். எல். ஏ. ஆரம்பத்தில் தேசீயக் கொடி ஏற்றிவைத்தார்.

மகாநாட்டு அமைப்பாளர் திரு. S. சூரியநாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினர். அவர் தமது பிரசங்கத்தில் சொன்னதாவது:—

சிறிய வர்த்தகர்களின் வரிச்சுமையைக் குறைக்கவும் அவர்களுக்குள்ள இன்னல்கள் நீங்கவும் வரிவிதிப்ப வரம்பை ரூபாய் நாற்பதாயிரத்துக்கும் அதிகமாக உயர்த்த வேண்டுமென்றார். அழுகக்கூடிய பொருள்களை விற்பனை செய்யக்கூடியவர்கள் கஷ்டத்தை உணர்ந்துமுன்பு அவர்களுக்கு வரி கட்டுவதினின்று அரசாங்கம் விலக்களித்தது. புதிய மசோதா சட்டமானால் இந்த பகுதியினர் மிகவும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே அரசாங்கம் தொடர்ந்து இந்தச்சலுகையை நீடிக்க வேண்டும் என்று திரு. சூரியநாராயணன் கேட்டுக் கொண்டார்.

திரு. சுப்பையாநாயுடுபேசுகையில் சிறு தொழில் வர்த்தகர்களின் கோரிக்கைகள் நியாயமானவையே என்று கூறினர். இம்மாதிரி வர்த்தகர்கள் ஒன்று பட்டு தங்களுக்குள் மகாநாடுகள் நடத்தி கோரிக்கைகளை வெளிப்படுத்துவது பாராட்டுக்குரியது. இது நல்ல பயன் தரும். என்று அவர் சொன்னர்.

ஸ்ரீ. C. R. ராமசாமி எம். எல். ஏ. திறப்புரை

திரு. சி. ஆர். ராமசாமி எம். எல். ஏ. அவர்கள் மகாநாட்டை திறந்து வைத்துப் பேசியதாவது:

புது விற்பனைவரி மசோதா கொண்டுவரும் விஷயத்தில் அரசாங்கம் அவசரப்பட்டு எதையும் செய்யாது. இப்போது உள்ளதே போதும். அதுவே சிறந்தது என்றால் அதையே செய்வார்கள்.

வர்த்தகர்கள் ஜூன் 30ந் தேதிக்குள் தங்களது குறைகளை அரசாங்கத்துக்குத்தெரிவித்துவிடவேண்டும். அதன் பின் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பொறுக்குக் கமிட்டி பரிசீலனை நடத்தும், அதன் பின் நவம்பர் மாதவாக்கில் மசோதா சட்டசபை முன்வரலாம் என்று அவர் சொன்னர்.

டாக்டர் லோகநாதன் சிபாரிசுகள்எல்லாம் சரிஎன்பதும் தவறு. அவர் கைத்தறிக்கும் விற்பனைவரி போட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இது நடக்கக்கூடிய காரியமா? என்று அவர் கேட்டார்.''

மாதவரம் திரு. ஜி. நாராயண சாமிநாயுடு எம். எல். ஏ பேசுகையில் சொன்னதாவது:—

எந்த ஒரு ஆளும்கட்சியும் தனக்கு ஆதரவாக உள்ள ஒரு சமூகத்தினருக்கு தொல்லைகொடுத்துஅவர்கள் மாற்றாரிடம்போய்ச்சிக்குவதைவிரும்பாது. அரசாங்கத்துக்குவரி செலுத்த் வேண்டுமென்பதுபற்றி யாவருக்கும் அபிப்பிராயம், வித்தியாசம் கிடையாது.

இந்தப் புது மசோதாவை எடுத்துக்கொள்வோம். இதன் மூலம் பத்தரைகோடி ரூபாய் வருவாய் எதிர்பார்க்கப்படுகின்றது. இப்போதுள்ளதிட்டப்படி யில்லாமல் மாற்று வழிகள் மூலம் இதே வருவாயை அடையமுடியுமென்றால் அந்த வழிகளைக் கடைபிடிக்க அரசாங்கம் தயங்காது என்று நான் நம்புகிறேன்என்றுஅவர்சொன்னர்.

திரு. ராமாமிர்தம் தொண்டமான் எம். எல். ஏ., திரு. வி. கே. கோதண்டராமன் எம். எல். ஏ. ஆகியோரும் வர்த்

தக சம்மேளனத்தின் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசினார்கள்.

தீர்மானங்கள்

உத்தேச மசோதாவை அடுத்த வருடத்திற்குத் தள்ளிவைத்த ராஜ்ய அரசாங்கத்தையும் தொழில் இலாகா மந்திரி திரு. ஆர். வெங்கட்ராமனையும் இம்மகாநாடு பாராட்டுகிறது. அதி விரைவில்கெட்டுவிடக்கூடிய பழம், வாழைஇலை, வெற்றிலை, காய்கறி, புஷபம், உருளைக்கிழங்கு, வெங்காயம் வெள்ளைப்பூண்டு, இறைச்சி மீன், முட்டை, தேங்காய் ஆகிய அழுகல் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து பூரணமாக விலக்களிக்க வேண்டுமென ராஜ்ய அரசாங்கத்தை இம்மகாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

ரூபாய் ஐம்பதினாயிரத்துக்கு உட்பட்டு வர்த்தகம் செய்யும் சிறிய வர்த்தகர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென ராஜ்ய அரசாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக் கொள்கிறது.

சிறு தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருள்களான எண்ணெய், பிண்ணாக்கு, இரும்பு சாமான், கரி, விறகு, பெப்பரமெண்ட், சாக்லெட், பிஸ்கட் கேக், சோப், தோசாமான் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல், அலுமினியம், செம்பு, பித்தளை, பாத்திரம், பர்னிச்சர், சென்ட், பவுடர், ஸ்நோ, ஹேர்ஆயில் ஊதுவத்தி, ஆகியவற்றுக்கு 10 ஆயிரம் ரூபாய்வரை அளிக்கப்பட்டுள்ள வரி விலக்கை ரத்து செய்துபுதிய விகிதாச்சாரப்படிவரிவிதிக்க இருப்பதற்கு இம்மகாநாடு தனது ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்ளுகிறது என்று நான்காவது தீர்மானம் கூறுகின்றது. இத்தீர்மானங்களை திரு. சூரியநாராயணன் கொண்டுவந்தார். திருவாளர்கள் ஏ. இப்ராகீம் பி. எச். நசிருத்தீன், அருணாசலம் ஆகியோரும் தீர்மானங்களை ஆதரித்துப் பேசினார்கள்.

*

MANIYAM INDUSTRIAL AND ENGINEERING WORKS

SANKARI ROAD,

Sankari, O. A. TRICHENGODE, Trichengode, P. O.

1. Agricultural Pumpset repairs
2. Gas Welding
3 Consumer goods
4. Jaggery and Sugar cane pans with Firegradings
5. Iron safe and allied articles
6. Lathe - Work

Wholesale and retail

Proprietor.

T. M. Subramaniya Asari

தீப்பெட்டித் தொழில்: அரசாங்கப் பாதுகாப்பு

சாத்தூர். K. S. S. ஆறுமுகசாமி

தென்னாட்டில் - குறிப்பாக சிவகாசி, சாத்தூர், ஏழாயிரம் பண்ணை, கோவில்பட்டி பகுதிகளில் நூற்றுக்கு மேற்பட்ட தெர்ழிற்சாலைகளில் மிகவும் நல்ல முறையில் குடிசைத் தொழில் முறையில் நடைபெற்றுவந்த தீப்பெட்டித் தொழிலானது சென்ற ஒரு வருடகாலமாக படிப்படியாய் குறைந்து வந்து, இன்று மிகவும் மோசமான நிலையை அடைந்திருக்கிறது. இதற்குக் காரணம் போதிய அரசாங்கக் கவனிப்பு இல்லை. மத்திய, மாநில அரசினர் உரிய வழி, வகைகள் செய்யும்படி வேண்டுகின்றேன்.

மேற்கூறிய நான்கு இடங்களில், உள்ள தீப்பெட்டித் தயாரிப்பு நிலையங்கள் மாத்திரம் மாதம் ஒன்றுக்கு அரை இலட்சம் குரோஸ் தீப்பெட்டிகள் தயார் செய்து வருவதன் மூலமாக மத்திய அரசாங்கத்துக்கு சுமார் 6 கோடி ரூபாய் கலால் வரியாக ஆண்டு ஒன்றுக்குசெலுத்தி வருகின்றன. ஆனால், இவ்வளவு பெரும் தொகையை வரியாகச்செலுத்தும் தொழிலுக்கு குறைந்த அளவிலாவது மத்திய அரசினரிடமிருந்து சலுகை பெறப்படுகிறதா என்றால் "இல்லை" என்று தான் கூற வேண்டியிருக்கிறது.

40 குச்சிகள் கொண்ட ஒரு குரோஸ் தீப்பெட்டியின் உற்பத்திச் செலவு (மருந்து சாமான், தாள் வகைகள், குச்சி, பெட்டிகள், சம்பளம், கூலி, செலவுஉள்பட) ரூ. 17 ஆகிறது. ஒருரூபாய் உற்பத்திச் செலவு ஆகும் ஒரு குரோஸ் தீப்பெட்டி கலால் வரியோடுரூ 3-4-0 செலுத்த வேண்டியிருக்கிறது. இது மிகவும் அநியாயமானதாகும். அந்நியரெனக் கருதப்பட்ட ஆங்கிலேயர் ஆட்சியில் முதலில் தீப்பெட்டிக்கு வரிகிடையாது. பிறகு 40 குச்சி தீப்பெட்டிக்கு ரூ 1 வீதமும், அதன் பின்பு ரூ 2 வீதமும் விதிக்கப்பட்டது. ஆனால் மக்களாட்சி மலர்ந்திருப்பதாதாகக் கூறப்படும் இன்று—நேருஜி தலைமையில் இயங்கும் காங்கிரஸ் ஆட்சியில் 40 குச்சி தீப்பொட்டிக்குகுரோஸ் ஒன்றுக்கு ரூ 3-4-0 ஆக வரி உயர்த்தப்பட்டிருக் கிறது. வெளிநாட்டு இறக்குமதிப் பொருள்களுக்குக்கூட இவ்வளவுஅதிகமான அளவில் வரிவிதிக்கப்படுவதில்லை

ரூ 2 வரியாக இருக்கும் போது ரிபேட்2 அணாகொடுக்கப்பட்டது. ஆனால் தற்போது ரூ 3-4-0 வரிக்கு ரிபேட் 10 நயாபைசா தான் கொடுக்கப்படுகிறது.

உற்பத்தியாளர்கள் வேண்டுகோளுக்கிணங்க 30, 50 குச்சிபெட்டிகள் உற்பத்தி செய்ய அனுமதித்த சர்க்கார், 40, 60 குச்சி பெட்டிகளுக்கு தள்ளுபடி(ரிபேட்) தொகை கொடுத்துவந்ததை 30, 50 குச்சிபொட்டிகளுக்குக் கிடையாதென்று மறுத்துவிட்டது. ஆகவே ஷை இரண்டு புதிய ரகங்கள் செய்ய அனுமதித்தும் பிரயோசனமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

மத்தியவிற்பனைவரிஎன்ற பெயரால், இன்று கலால்வரி கட்டும் தொகைக்கும் சேர்த்து மத்திய விற்பனை வரி வசூலிக்கப்படுகிறது. அதாவது வரிகளுக்கும் வரி விதிக்கப்படுகிறதுஇது எந்த அரசாங்கத்திலும் கேள்விப்பட்டிருக்க முடியாதஅநீதியாகும். உற்பத்தியாளர்கள் இதை எதிர்த்து எவ்வளவோ வாதாடியும் பலன் கிடைக்கவில்லை.

இந்த விதமாக வரிகள் உயர, உயர உற்பத்தியாளர்களுக்கு கடந்த இரண்டு வருடங்களாகவே பெரும் அளவில் நஷ்டம் ஏற்பட்டு வருவதுடன், தீப்பெட்டி விற்பனை விலை கூடியிருப்பதால், மக்களிடையே வாங்கும் சக்தி நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. இதனால், இதுவரை மிகவும் குறைந்த ஊதியமே அடைந்துவந்த தொழிலாளர்களுக்கு வேலையே இல்லாமல்போய் விடும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

காந்திய முறைப்படி நடைபெற்றுவரும் இக்குடிசைத் தொழிலை நம்பிவாழும் இலட்சக்கணக்கான தொழிலாளர்களின் வயிற்றில் அடித்துவிட்டு, அந்நிய நரட்டு மூலதனத்தில்நடைபெற்றுவரும் இயந்திரத் தொழிற்சாலைகளுக்கும் இதேவிகிதத்தில் வரிவிதிப்பதன்மூலம் ஷையார்களுக்கு ஆதரவு கொடுத்து, அன்னியச்

சுரண்டலுக்கு வழிவகுத்துக் கொடுக்கும் முறையில் அரசினர் நடந்து வருகின்றனர்.

மற்றமாநில அரசினர் புதிய புதிய தொழிற்சாலைகளை நிறுவி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவருகிறார்கள். ஆனால், நமது சென்னைமாநில அரசினரோ புதிதாகதீப்பெட்டித்தொழிற்சாலைகள் நெல்லை, தஞ்சை, பரமக்குடி போன்ற பகுதிகளில் நிறுவப்போகிறார்களாம். வரி உயர்வினால், தற்போதுநடைபெறும் தொழிலுக்கே ஆபத்து ஏற்பட்டு, தனிப்பட்டோர் சிக்கனமான செலவில் நடத்தும் போதே நஷ்டம் ஏற்பட்டுவரும் இந்நிலையில், நாங்களும் தொழிற்சாலை நிறுவுகிறோம் என்று கூறிக்கொண்டு, தீப்பெட்டித் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, இதன் மூலம் சில நூறு பேர்களுக்கு வேலை கொடுக்கப்போவதாகக் கூறுகிறார்கள். ஆனால், அதே நேரத்தில் சிவகாசி, சாத்தூர் பகுதிகளில் பதினாயிரக்கணக்கான பேர்கள் வேலை இழப்பதற்குக் காரணகர்த்தாக்களாவதுடன், மக்களை வாட்டி வதைத்து வசூலிக்கப்படும் வரிப்பணத்தை, இலாபம் கிடைக்க இயலாத சூழ்நிலையில் உள்ள தொழிலில் முடக்குவதன் மூலம் இலட்சக்கணக்கில் நஷ்டமடைந்து வீண் விரயம் செய்த தவறுக்கும் ஆளாகிறார்கள், நமது மாநில அரசினர்.

மத்திய அரசுக்கு தீப்பெட்டி வரி கோடிக்கணக்கில் போய்ச் சேருவதாலும், மத்திய அரசினர் இத்தொழில் வளர்ச்சியில் பாராமுகமாய் இருப்பதாலும், வடக்கு-தெற்கு என்ற பிரிவினை மனப்பான்மைவலுவடைந்து வரும் இந்நாளில் இத்தீப்பெட்டித் தொழில் பிரச்னை பிரிவினை பேசுவோர்க்குப் பெரும் ஊன்று கோலாகப் பயன்படக்கூடுமாதலால் உடனடியாக மத்திய அரசினர் இது விஷயத்தில் தலையிட்டு ஆவனசெய்ய வேண்டுவது அவசியமும் அவசரமும் ஆகும்.

மாநில அரசினரும், புதிய தீப்பெட்டித் தொழிற்சாலை ஏற்படுத்தும் எண்ணத்தைக் கைவிட்டு அதில் முடக்கி வீணாய் நஷ்டமடையும் பணத்தை ஏற்கனவே தொழில் நடத்திவரும் உற்பத்தியாளர்களுக்குப்பயன்படும்வகையில் செலவு செய்யவேண்டியது தான்நியாயம். மேலும் மத்தியவிற்பனை நிலையங்களையும் உடனடியாக ஏற்படுத்தி, இத்தொழிலையே நம்பி இருக்கும் இலட்சக் கணக்கான தொழிலாளர்களின்பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டியது நம் சர்க்காரின் கடமையாகும்.

தினமணி

ஸ்ரீ கே. பெருமாள் உடையார்
55, எடப்பாளையம் தெரு, சென்னை-3.

25—4—58

அன்புடையீர்,

"தொழில்" என்ற பெயருடன் மாதமிருமுறைப் பத்திரிகையைத் தொடங்கவிருப்பது குறித்து மகிழ்ச்சி.

சிறிய தொகைகளை முதலீடு செய்து கச்சிதமான தொழில்களை ஆரம்பித்து நடத்துவதற்குப் பயனுள்ள யோசனைகளை தெரிந்தவர்களைக் கொண்டு நல்ல முறையில் எழுதி வெளியிடச் செய்வது நலம். ஏட்டுச் சுரைக்காயாக இராமல் காரியகரமாகவேண்டும். அதுவே முக்கியம்.

சர்க்காரிடம் பெறக் கூடிய உதவி, அதற்கு மனுச்செய்து கொள்ளும் விதம் போன்ற தகவல்களையும் முழு விவரங்களுடன் தரலாம்.

சிறிய தொழில் தயாரிப்புக்களின் விற்பனைக்கு பிறர் உதவியை நாடுவதில் பயனில்லை. அந்தந்த வட்டாரத்தில் நிலமையறிந்து, சுலபமாகச் செலவாகக் கூடியவகைகளைத் தயாரிப்பதுதான் எல்லா வகைகளிலும் சிறந்தது. நீங்கள் சிறு தொழில்களை நடத்தி அனுபவம் உள்ளவர்கள். எனவே நீங்கள் ஆரம்பிக்கும் பத்திரிகை நல்லபடி அமையும் என்பதே என் நம்பிக்கை. அது முழு வெற்றி காண வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

அன்பன்

ஏ. ஜி. வெங்கடாச்சாரி
தினமணி துணை ஆசிரியர்.

மனம் மாறினால்

வித்துவான் S. விசுவநாதன்

''கைத்தொழில் ஒன்றைக்
கற்றுக் கொள்; கவலை உனக்கில்லை
ஒத்துக்கொள்''

என்ற அமுத வாக்கிற்கேற்ப எல்லாரும் ஏதாவது ஒரு கைத்தொழிலைக் கற்றுக் கொள்வது மிக மிக இன்றியமையாததாகும். நம்நாட்டில் கைத்தொழிலைக் கற்றுக் கொள்ளவசதி நிரம்பஉண்டு. அதைப் போற்றுவார் எண்ணிக்கை தான்மிகக்குறைவாக இருக்கின்றது. நம் நாட்டில் தற்போது காணப்படுகின்ற கைத்தொழில்களும் நல்ல முறையில் பண்பட்டிருப்பதாகவும் சொல்லவியலாது. இவ்வாறு இருப்பதற்குக் காரணம் பொருளாதார நிலை ஒருபுறமிருக்கக் கல்வி, யறிவுநிரம்பப்பெறாதவர்களே இத்தகைய தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதே.

மேல் நாடுகளில் தொழிற் கல்வியைப்பெரிதும் போற்றுகின்றனர். அவர்கள் செய்யும் தொழில்கள் அனைத்தும் நாளுக்குநாள் அதிகம் பெருகின்றன.நேரத்திற்குங்காலத்திற்கும் ஏற்ப மாறுகின்றன. உற்பத்தி மிகுதியாக இருப்பினும் விலையும் குறைவாக இருக்கப்பார்க்கின்றோம்.

அரசியலாரும் கைத்தொழிலுக்குப்போதிய ஊக்கம் அளித்து வருகின்றனர். அதனைப் போற்றி வளர்க்க மக்கள் மனம் பண்பட வேண்டும். பண்பட கல்வி அவசியம் தேவை. கல்வியினால் அறிவைப்பெற்று,அதனைநேர்மையான முறையில் பயன்படுத்த வேண்டும்.

உதாரணமாக, கைத்தொழில் சம்பந்தமாக பெரிதும் அறிவு பெற்ற ஒருவர் ஒரு தொழிற்சாலையைஏற்படுத்துவதாக வைத்துக்கொள்வோம். அவர் சுயநலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தனது தொழிற்சாலையை நடத்துவாரானால், அவர் மட்டும் சில ஆண்டுகளில் நல்ல நிலையைஅடைந்துவிடலாம்.பெரியமாளிகையில் வாழலாம். இன்பக்கடலில் மூழ்கி இருக்கலாம். இம்முறைமிகவும் தவறு.

அவர் தன் தொழிலகத்தில் இருக்கின்ற ஒவ்வொருவரையும் தன்னைப் போல் திறமையுடையனாகவும், அறிவுடையனாகவும் ஆக்க உழைக்க வேண்டும்.தொழில் நுட்பங்களை ஒளியாதுஉழைத்துப்பயற்சி அளிக்க வேண்டும்.நாள்தோறும்தொழிலின் வளர்ச்சியைக் காண வேண்டும். அவர்களதுஇன்ப துன்பங்களில் பங்கு கொள்ள வேண்டும். தொழிலகத்திலுள்ளவர்கள் ஏதாவது ஒரு தொழிலைக்கற்றுக் கொண்டால் மட்டும்போதாது. அவர்களுக்குப்பொதுக்கல்வி வேண்டும்.அதற்காக அவர்களுக்குத் தொழில் நுட்பக் கல்வி அளிக்கவேண்டும். புதுமை, புதுமையான பொருள்களைக் காலத்திற்கேற்றவாறுஉண்டுபண்ணக் கூடிய அறிவையும் ஆற்றலையும் தரவேண்டும். இன்னபிறமுறையில்தொழிலகத்தை நடத்தினால் தொழில் முறைவளரும்;மக்களும் மகிழ்வெய்துவர். நாடும் நலம் பெறும். வாழ்கதொழில்! வாழ்க தமிழகம்!

வ. உ. சி. சுப்பிரமணியம்,
உதவி, ஆசிரியர், ''தினமணி''

விளம்பி ஆண்டு,
சித்திரைத் திங்கள்
முதல் நந்நாள்

தொழில் ஓங்குக !

உழைப்பால் உயர்ந்தவர்கள் தமிழ் நன்மக்கள். தொழில், அவர்களது உயிர்; உழவு அவர்களது உடல். வரப்புயரத் தொழில் ஓங்கும். அன்புசால் நண்பர் திரு. கே. பெருமாள் உடையார் அவர்கள் ஒரு தொழிலாளி; பாட்டால் உயர்ந்த பண்பு படைத்தவர். நாடுயர அவர் தொடங்கும் ''தொழில்'' ஓங்குக; புத்தாண்டில் உதிக்கும் ''தொழில்'' இதழ், புதுமைகள் பல பெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை. தொழிலுக்கு வந்தனை செய்குவோம்!

வ. உ. சி. சுப்பிரமணியம்

அறிமுகம்

("சிசு")

[இந்தப் பகுதியில் சிறு அல்லது குடிசைத்தொழில்களில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள், பற்றி நம் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறோம். உற்பத்தியாளர்கள் கட்டணம் செலுத்தாமல் இந்த அறிமுக வாய்ப்பை பயன் படுத்திக்கொள்ளலாம். ஆனல் பண்டங்கள் மாதிரிக்கு அனுப்பப்படவேண்டுவது அவசியம், "ஆசிரியர், தொழில் (அறிமுகப்பகுதி), சென்னை." என்ற முகவரிக்கு மாதிரிகள் அனுப்பப்படுதல் வேண்டும்.]

★

ALVITONE

(ஆல்விடோன்)

சிறந்த உனவு பானம் 'ஆல்விடோன்' உடல் வளர்ச்சிக்கும், உற்சாகத்துக்கும், நோயற்றவாழ்வுக்கும் தேவையான உப்புக்கள் எல்லாம் இந்த பானத்தில் அடங்கியிருக்கின்றன. (All Vitamins in one - ALVITONE) இறக்குமதியாகும் அயல்நாட்டுஉணவுபானங்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளது. அபினி போன்ற போதைப் பொருட்கள் எதுவும் ஆல்விடோனில் கிடையாது.

கொக்கோ, பாதாம்பருப்பு, பால் சர்க்கரை போன்ற விலை உயர்ந்த சத்துள்ள உணவுப் பொருட்கள் அடங்கியது 'ஆல்விடோன்' மனதைக் கவரும் மணமும், கண்ணைப் பறிக்கும் நிறமும் நற்சுவையும் கொண்ட 'ஆல்விடோன்' குழந்தைகள் வயோதிகர் வரை, நோயாளி முதல் உடல் வலிமையுள்ளவர்கள் வரை யாவரும் விரும்பிச் சாப்பிடும் சிறந்த உணவுப்பானம். காலையில் எழுந்தவுடனும், இரவில் படுக்கும் முன்பும் நாள்தோறும் 'ஆல்விடோன்' அருந்திப் பாருங்கள்; பின்பு நீங்களே சான்று சொல்வீர்கள் அதன் சிறப்புக்களுக்கு! எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :

ALVITONE

Laborataries, Madras-16.

அடுத்த இதழில்?

அடிஷனல் டைரக்டர் ஆப் இண்டஸ்ரிஸ் ஆபிஸ் அயரன் அண்டு ஸ்டீல் அலாட் மெண்டும், பேப்ரி கேட்டர்கள் கஷ்டங்களும் அடுத்த இதழில் வெளிவரும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

தொழில்

மாத மிருமுறை

சந்தா விபரம்

தனிப் பிரதி	0—4—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

JL M24, N58T0 N58:1:1

பொன்னாடை அணிவிழா

✻

சென்னை, ஸ்ரீ கந்தசாமி கோயிலென வழங்கும் ஸ்ரீ முத்துக் குமார சாமி தேவஸ் தானத்தில்சென்றபதினைந்து ஆண்டுகளாக தலைமை தர்ம கர்த்தராகத் தொடர்ந்து தொண்டாற்றி வருபவரும், பிரபல இரும்பு வர்த்தகரு மாகிய **காட்டாவூர் உயர்திரு சுப்பிரமணிய செட்டியார்** அவர்கள், தமது தர்மகர்த்தா பதவியி லிருந்து ஓய்வு பெறப் போவதை முன்னிட்டு, அன்னாரைப் பாராட்டி, உப சரிப்பதற்காக விளம்பி ஆண்டு சித்திரைத்திங்கள் 7-ஆம் நாள் (20—4—58) ஞாயிறு மாலை 5-மணிக்கு ஸ்ரீ கந்தசாமி கோயில் வசந்த உற்சவமண்டபத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

'இசைமணி', 'சங்கீத வித்வான்' **சீர்காழி எஸ். கோவிந்தராசன் அவர்கள் இறைவணக்கம் பாடினர்.**

'திருப்புகழ்மணி' உயர்திரு டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் அவைத்தலைமை வகித்தார்.

உயர்திரு ராஜா சர். எம். ஏ. முத்தையாசெட்டியார் அவர்கள் பொன்னாடை போர்த்தினர்கள்.

உயர்திரு பி. எஸ். செட்டியார் அவர்கள் (சென்னைக் கார்ப்பரேஷன் கவுன்சிலர்) காட்டாவூர் உயர்திரு சுப்பிரமணிய செட்டியார் அவர்களின் திருவுருவப் படத்தை திறந்து வைத்தார்.

சென்னை ஜில்லா இரும்பு-எஃகு சாமான் தயாரிக்கும் சங்கம்

19—4—58-ல் இச்சங்கத்தின் பொதுக்குழுகூட்டம் சென்னை கந்தகோட்டம் மெத்தை உற்சவமண்டபத்தில்கூடியது. உயர்திரு P. E. இராகவ செட்டியார் M. C. தலைமைவகித்தார், உயர்திரு. K. பெருமாள் உடையார் ஆல்டர்மேன், தலைவர் சென்னை ராஜ்ய இரும்பு எஃகு பேப்ரிகேட்டர்ஸ் அசோசியேஷன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

நிர்வாகஸ்தர்கள் :

தலைவர். திரு. S. நடேச நாய்க்கர்

உப தலைவர்கள்: திரு. M. கண்ணன், P. E. இராகவ செட்டியார் M. C.

பொதுக்காரியதரிசி: திரு. R. S. குமாரசுவாமி

கூட்டுக்காரியதரிசி: K. இராதாகிருஷ்ணன்

உதவிகாரியதரிகள். திரு. K. V. ஆள்வார் ஐயங்கார், K. இராமலிங்கம், M. வெங்கட்ராமன்,

பொக்கிஷதார்: திரு. M. பார்த்தசாரதி M.C.

நிர்வாகக் கமிட்டி

V. S. சம்பந்த செட்டியார்

P. K. ஏகாம்பர செட்டியார்

M. A. கோவிந்தசாமி,

G. மதுரை பிள்ளை,

H. A. கான்

R. அமிர்தலிங்கம்

S. தேசிங்கு முதலியார்

K. A. பொம்மன் செட்டியார்

M. கன்னியப்பன்

P. E. தணிகாசலம் செட்டியார்

G. அருள்மரிநாதன் (ஆல்டர்மென்)

P. K. கங்காதரன்

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

சட்டதிட்டங்களும். அமைப்பு விதிகளும் அங்கீகரிக்கப்பட்டன.

இச்சங்கத்தை சென்னை ராஜ்ய இரும்பு எஃகு பேப்ரிகேட்டர் சங்கத்தினுடன் இணைப்பதென்றும், தீர்மானிக்கப்பட்டது. இத்துடன் காரியதரிசியால் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

உயர் திரு. பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் மற்றும்பலரும் பாராட்டுரை வழங்கினர்கள்.

சென்னை கந்தசாமி கோயில் தர்மகர்த்தாவும், கார்ப்பரேஷன் கவுன்சிலருமான ஸ்ரீ P. E. இராகவச் செட்டியார் வந்தனோபசாரம் கூறினர்.

144846

Are you interested in purchasing Iron, Steel and Tin products such as, Buckets, Fire Buckets, Sals, Pots, Drums, Suitcases, Bath-Tubs, Watering Cans, any kind of tin containers, etc. etc?

THEN WE OFFER OUR SERVICE TO YOU.

We are confident that our long experience in the manufacture of these and other allied products and supply against the orders of the Southern Railway and the Ministry of works, Housing & Supply will stand us in good stead to fulfil your valuable orders quickly.

★

Please address your enquiries to :

P. K. GOVINDASWAMY

(ESTD. 1944)

GOVT. APPROVED IRON & STEEL GOODS FABRICATOR,

46, Walltax Road, Madras-3.

The House for EFFICIENCY, SATISFACTION & PROMPTITUDE.

Grams : "IRONFABRIC MADRAS"

ராசி பலன்

வி. வெங்கட்ராமன்

சுக்	கே சூ பு		
செ	1—5—58 முதல் 15-5-58 வரை இராசி		
	சனி	குரு ராகு	சந்

(அசுவணி பரணி கார்த்திகை $\frac{1}{4}$)

மேஷ

இந்த ராசிக்காரர்களுக்கு ராசிநா்தன் லாபஸ்தானத்திலும் பாக்கிய விரயாதி சப்தமத்திலும் ஜீவனலாபாதி அஷ்டமத்திலும் சஞ்சரிப்பதால் முற்பாதியில் சந்திரனும், செவ்வாயும் பலம் பொருந்தியிருப்பதால் தனப்பிராப்திகளும் சுபமங்களமும் சுமுகமாக நடைபெறும். பின்பாதியில் 5, 6 தேதிகளில் அலைச்சலும் கஷ்டங்களும் தரத்தக்கதாகும். கோச்சாரம் திசாபுத்திசௌகரியமாகநடக்கக் கூடியவர்களுக்கு விவாகலாபங்கள் உண்டாகும். சினிமா, சங்கீதம் இவைகளில் ஈடுபடுபவர்களுக்கு புகழ்கீர்த்தி வாகனம், கார் சஞ்சாரம் செய்ய நேரும். எவ்வளவு வருமானம் வந்த போதிலும், திருப்தி மன அமைதி இராது. 15-5-58 அன்று பின்பாதியில் வெளியூர் பிரயாணம் செய்யவரும்.

(கார்த்திகை $\frac{3}{4}$ ரோகிணி மிருகஷீரிஷம் $\frac{1}{2}$)

ரிஷ

இந்த ராசிக்காரர்களுக்கு சுக்கிரன் லாபஸ்தானத்தில் அதி உச்சமாக சஞ்சரிப்பதால் லாபாதி குரு அஷ்டமத்தில் ராகுவுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் யோக பலன்கள் சுமுகமாக நடந்தேறி வரும். தர்மகர்பாதி 7-ம் வீட்டில் சனி, செவ்வாய் 10-மிடம் சஞ்சரிப்பதனால், பரிவந்தனையாக நின்றுயிருப்பதால் ஜீவனம், உத்தியோகம், சினிமா, கார் இந்த நிலையிலிருப்பவர்கட்கு நிர்வாகம் சுகமாக நடந்து வரும். சுக்கிரன் லாபத் திசையிலிருப்பதினால் வீடு, வாகனம், தனம் வருமானம் இவைகள் நல்லமுறையில் கிடைக்கும். முன்னால் மூன்று தினங்களுக்கும் பின்பாதியில் 14-5-58, 15-5-58 இந்த நாட்களிலும் பணம் கிடைக்கும்.

(மிருகசீரிஷம் $\frac{1}{2}$ திருவாதிரை 1 புனர்பூசம் $\frac{3}{4}$)

மிது

இந்த ராசிக்காரர்களுக்கு இந்த சமயம் சூரியன், புதன், லாபத்திலும், குரு பஞ்சமத்திலும், வாசம் செய்வதினால் கௌவுரவம், புகழ், யோகம், பணம் வருமானம் ஏற்படுவதுடன் சினிமா உத்தியோகம், கவர்ன்மெண்ட் :உத்தியோகம், தொழில் செய்யும் வியாபாரிகளுக்கும் பணம்கௌவுரவம்செல்வாக்குஇவைகள் அதிக நன்மைய்யை அடைய ஏதுவாகும். அரசாங்கத்தில் ஜீவிக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு வெளியூர் பிரயாணங்கள், வெளிநாடு போகும் வாய்ப்புகள் ஏற்படும். ஜீவனத்தில் உயர்வு, வருமானம், சம்பள உயர்வுகள் உண்டாகும். இந்த ராசிக்காரர்களுக்கு 9, 10 இந்த இரண்டு நாட்களும் கெட்டநாட்களாகும். எதிலும் பிரவேசிக்காமல் இருப்பது நல்லதாகும்.

(புனர்பூசம் $\frac{1}{4}$ பூசம் ஆயில்யம்)

கடக

இந்த ராசிக்காரர்களுக்கு சந்திரன் சஞ்சரிப்பும் முதல் இரண்டு தினம் சுமுகமான நாளாகும். வருமானம் எதிலும் எதிர்ப்புக்கள் இருந்து வரும். ஜீவனஸ்தானத்தில் சூரியன், புதன் சஞ்சரிப்பதனல், ஜீவனம் தொழில் உத்தியோகம் இவைகளில் தெய்வீகத்

தன்மை பொருந்திய வழியில் இறைவன் திருவருள் பெற்றவர்களுக்கு சுமூகமாக நடக்கும். ஆனால் இடை இடையே அடிக்கடி கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும். திசாபுத்திகள் செவுகரியமாக நடக்கிறவர்கள் கஷ்டத்திலிருந்து விலகிக் கொள்ளலாம். தசமத்திலுள்ள சூரியன் புதன் இவர்கள் பலமாக இருக்கிறதனால், சகலமும், சகிப்புத் தன்மையுடன் நடந்து கொள்ள சரிவரும்.

(மகம் பூரம் உத்திரம் ¼)

சிம்ம

இந்த ராசிக்காரர்களுக்கு, லக்னாதிபதி, சூரியன், பலமாய் உச்சமாக இருப்பதினாலும், புதன், சூரியனுடன் இருப்பதினால் செவ்வாய் சப்தமத்தில் நின்றதினாலும் குரு, ராகு 3 ம் வீட்டிலிருப்பதினால் ஜீவனம், தொழில், வியாபாரம், கொஞ்சம், தாமதமாகவே நடைபெறும். திசாநாதன் பலமாக இருந்தால் நிர்வாகம் ஜீவனம் சவுகரியமாக நடந்துவரும் சனி, செவ்வாய், குரு இந்த ராசிக்காரர்களுக்கு சரிவர இல்லாத படியினால் அடிக்கடி கவலை, மனக்கஷ்டம், குடும்ப விகல்பம், விரோதம் இவைகள் ஏற்படும். சினிமா, சங்கீதம் ஈடுபடுவோர்களுக்கு, கொஞ்சம் சுகமும், கஷ்டமும், அடிக்கடி தொல்லை அல்லல் உண்டுபண்ணிக் கொண்டே வரும். கூடிய வரையில் இந்த ராசிக்காரர்கள் ஆலய வழிபாடு செய்தால், நன்மையடைய நேரும்.

(உத்திரம் ¾ அஸ்தம் மிருகஷீரிஷம் ½)

கன்னி

இந்தராசிக்காரர்களுக்கு குருபகவான் ராகுவுடன் சஞ்சரிப்பதிலும் நல்ல பலன்களை அடைவதற்கு சமீபத்தில் எதிர்ப்பார்க்கலாம். திசாபுத்திகள் நலமாக இருந்தால் நல்ல ராஜயோகம் சுகயோக இன்பமான பலன் அடைய வாய்ப்பு ஏற்படும். சந்திர, லக்னத்திற்கு செவ்வாய் சஷ்டமத்தில் சஞ்சாரம் செய்வதினால், சினிமா, சங்கீதம், உத்யோகம், தொழில் செய்பவர்களுக்கு லாபகரம் கீர்த்தி, புகழ், யோகம், இவைகள் சுலபமாக அடைவதற்கு ஏதுவாகும். பின் பாகத்தில் நல்லவிதமான சிநேகம், நண்பர்கள் மூலம், லாபம், பணவரவு சிநேக உதவியடைய எதிர்பார்க்கலாம். சுலபமாக வாழ்க்கைத்தரம் குடும்பம், முன்னேற்ற மடையலாம், சூரியன் அஷ்டமத்தில் அதிக உச்சகமாக இருப்பதில் வாழ்க்கையில் சில கலகம், கோள் நடக்கும். சிலசமயம் போக்கு வரவுகள், தவறிவிழுதல் இவைகள் ஏற்படும். கூடியவரையில் நிர்வாகம் வாய்ப்பு சரிபோகும்.

(மிருகஷீரிஷம் ½ சுவாதி விசாகம் ¾)

துலா

இந்த ராசிக்காரர்களுக்கு ஜன்மகுருவும், ராகுவும் செவ்வாய் பஞ்சமத்திலும், சூரியன், புதன், கேது சப்தமத்திலும் சஞ்சாரம் செய்வதினால் அதிக நஷ்டமும், கஷ்டமும், கோள், கலகங்களும், நடக்கும். திசாபுத்தி பலமாக நடக்கும் ராசிக்காரர்களுக்கு எந்த வகையிலும் நிர்வாகம் பொருப்புடன் நடக்க வரும், குடும்பம் சரிவர நடவாது. வாழ்க்கையில் சினிமா தொழில் வியாபாரம், உத்தியோகம் செய்பவர்களுக்கு அடிக்கடி மன அமைதி இராது. அலைச்சல், வீண் விவாதம் கலகம், உண்டாகும், சினிமா, கார், சங்கீதம், உத்தியோகம், ஜீவனம், வியாபாரம் செய்பவர்களுக்கு திருப்திவருது.

(விசாகம் ¼ அனுஷம் 1 கேட்டை 1)

விருச்

இந்தராசிக்காரர்களுக்கு தற்சமயம் நாலில் செவ்வாயும், ஆறில் சூரியன், புதன், கேது, சஞ்சாரம் செய்வதில் இந்தராசிக்காரர்களுக்குநல்லமாதிரி யோக பலாபலன்களை சொல்ல சரியில்லை. ஆயினும் திசாபுத்திகள் அனுகூலமாகநடக்கும். நேயர்களுக்கு ஷை சங்கடமான கஷ்டம்குறைந்து சுலபமாக நடக்கும். சூரியன் நீங்கலாக மற்ற கிரகங்கள் யாவும் சரி இல்லை. சங்கீதம், சினிமா, தொழில், உத்தியோகம் செய்யும் நண்பர்களுக்கு அலைச்சல், வெளி சஞ்சாரம் நிம்மதியாக நடக்க அகம் சரியிராது. அரசாங்க ஜீவனம் செய்யும் நண்பர்களுக்குவெளியூர் மாறுதல், கலகம், கோள், இவைகள் ஏற்படும். தவிரவும் ஜீவனம், தொழில், மாறுபட்டு தாமதமாக நடக்கும்.

(மூலம் பூராடம் உத்திராடம் ¼)

இந்த ராசிக்காரர்களுக்கு கோச்சாரப்படி குரு, செவ்வாய் ஜீவன வழியில் லாபகரம், திருப்திகரம், சந்தோஷம், சுகமாக நல்ல பலன்

தனுசு

களை அடைய ஏதுவர்கும். முதல் நான்கு தினம் அதிக சந்தோஷமாக, புது நண்பர்கள் சிநேகிதம் அவர்களின் உதவி பெறுவதற்கு சர்தகமாக பின்பாதியிலும் வெளியூர் பிரயாணம் போக்கு வரவு ஏற்படும். வெளிப்பிரயாணத்தில் சாதகமான பலன்கள், லாபகரம் இவைகள் ஏற்படும். சினிமா, சங்கீதம், ஜீவனம் செய்பவர்களுக்கு அதிக சாதகமான பலன்கள் உண்டாகும்.

(உத்திராடம் ¾ திருவோணம் அவிட்டம் ½)

மகர

இந்த ராசிக்காரர்களுக்கு தற்சமயம் இருக்கும் கிரக நிலையை கவனிக்கும் அளவிலும், செவ்வாய் ஜீவனம், தொழில், சங்கீதம் இந்த ராசிக்காரர்களுக்கு வருமானத்திற்கு முன் கூட்டியே சிலவு காத்திருக்கும். திசாபுத்திபலமாக யிருந்தால் ஓரளவு சுகமாக ஜீவனம் நடந்து வரும். சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு நடந்து கொள்ள கூர்மையான புத்திசாலிகளாக விளங்குவர்.

(அவிட்டம் ½ சதயம் பூரட்டாதி ¾)

கும்ப

இந்த ராசிக்காரர்களுக்கு இந்தவார ஆரம்பம் 2 தினம் திருப்திகரமாக இருக்கும். தொழில் ஜீவனம் வியாபாரம் சினிமா சங்கீதம், இவைகளில் ஈடுபடுபவர்களுக்கு சுபமாக நடக்கும். ராஜயோகம் சுகபோக இன்பபலனகள் அடைய வரும். குடும்பத்தில் சுபம், மங்களம் சந்தானபிராப்தி மங்களம் இவைகள் திடும் பிரவேசமாக நடக்க ஏதுவாகும். ராஜாங்கத்தில் ஈடுபடும் நண்பர்களுக்கு புகழ், கீர்த்தி, நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும். அந்நியநாடு போகவும் ஏற்படும். ஜன்ம அங்காரகர், சஞ்சரிப்பதில் வீண், கலகம், கோள் விரோதம், உண்டாகும்.

(பூரட்டாதி ¼ உத்திரட்டாதி ரேவதி)

இந்த ராசிக்காரருக்கு தற்சமயம் குருவும் ராகுவும் சரியான இடத்தில் சஞ்சரிக்கவில்லை

(28ம் - பக்கம் பார்க்க)

குமரகுரு டின் ஒர்க்ஸ்

தங்களின் ஆர்டரின் பேரில் "டபுள் பாலிஷ் டின் பிரேட்டில் எல்லாவித சைஸ் டின்களும், கலாய் தகட்டில் எல்லாவித பொருள்களும் சுத்தமாக செய்து தருகிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

S. வீரபத்திரன்

S. R. முனிரத்தினம்.

உரிமையாளர்கள்.

5-C, கணக்கப் பிள்ளை தெருவு,

தண்டையார்பேட்டை,

சென்னை-21

விமர்சனம் :

சம்பூர்ண ராமாயணம்

எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் பிரமாண்டமான தயாரிப்பு

எம். ஏ. வி. பிக்சர்ஸாரின் துணிகரமான முயற்சிக்கு உதாரணம் சம்பூர்ண இராமாயணம்... சிறந்த நடிகர்களைக்கொண்டு - கம்பனின் இறவாத காவியத்தைத் திரையோவியமாகத் தந்த பெருமை படைத்தவர்கள் எம். ஏ. வி. பிக்சர்ஸார்...!

டைரக்டர் சோமுவினுடைய திறமையும் சிவாஜி கணேசனின் உணர்ச்சி மிகுந்த நடிப்பும்-அற்புதமான அயோத்தி நகர காட்சி ஜோடனைகளும் படத்தின் மூன்று தனி சிறப்புக்களாகும்...

கூனி கைகேயின் மனதைக் கெடுக்கும் பொழுது தூபம் போட்டு புகையெழுப்புவது போல் காட்டியிருப்பது டைரக்டரின் அசாத்திய திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு... பரதனை எடுத்த எடுப்பில் அறிமுகப்படுத்தாமல் பரதன் எப்பொழுது வருவான்? என்று அனைவரது உள்ளத்திலும் ஆர்வத்தைக் கிளறி விட்ட டைரக்டர் அனைவரது பாராட்டுதலுக்குரியவராவார்.

பரதனாக நடிக்கும் சிவாஜி கணேசன் தமது பேச்சாலும், நடிப்பாலும் அனைவரையும் உணர்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்திவிடுகிறார்... இராவணனாக நடிக்கும் டி. கே. பகவதி நமக்கு இராவணனாகவே தெரியவில்லை. இராசராச சோழனின் முத்திரை இன்னும் அவர் முகத்தை விட்டு மறையவில்லை... இருந்தாலும் அவர் நடிப்பு தரமானது... மற்ற யாருடைய நடிப்பும் பாராட்டக் கூடிய நிலையில் இல்லை...

வசனங்கள் மிகமிக அதிகம்... இருப்பினும் சலிப்புத்தட்டவில்லை. கம்பரது காவியத்தில் காணப்படும் வாசகங்களை இன்னும் அதிகமாகக் கையாண்டிருக்கலாம்...

மிகப்பெரிய படாதிபதிகளும் செய்ய அஞ்சக் கூடியகாரியத்தை எம். ஏ. வேணு துணிந்து செய்திருக்கிறார்...... முயற்சி துணிகரமானது. அமைப்பும் உயர்தரமானது!

(27-ம பக்கம் தொடர்ச்சி)

மீன இந்தராசிக்காரர்களுக்கு ஜீவனம், தொழில் வியாபாரம், செய்கிறவர்களுக்கு நிலைமைசரியாக ஒரே இடமாக சொல்லுவதற்கு நிலைமையில்லை. அடிக்கடி இடம் மாறுதல், பணம் கஷ்டம், சிநேகிதர் விரோதம், பகைமை, ஏற்படும். திசாபுத்தி பலமாக நடக்கிறவர்களுக்கு கூடியவரையில் நிர்வாகம் சமாளிக்க ஏதுவாகும். சினிமா, சங்கீதம், உத்தியோகம் செய்கிறவர்களுக்கு அடிக்கடி பகைமை, விரோதம், இவைகள் எதிர்ப்பாராமல் ஏற்படும். திறம்பட நிர்வகிக்க சாமர்த்தியமாக பலன்களை அடைய முயற்சியடைய வரந்ரு. ஜீவனம் உத்யோகம், கருர்கோள் மாறுதல் விலகவோ நேரிடும்.

Edited & Published by K. Perumal Udayar, 55, Edapalayam Street, Madras-3.
Printed by K. N. Thiruvengadam, at his Ananda Parvathi Press, 30, Edapalayam Street, Madras-3.

M. KANNAN

Government Approved Fabricator and Contractor

(Regd. 10)

No. 30, Wall Tax Road, Madras-3.

Please Contact us for Collapsible Gates, Main Gates, Window Grills, Ventilators and all other Building materials



COLLAPSIBLE GATE



MAIN GATE

Steel Trusses and erection works undertaken.

Specialist in Arc and Gas welding.

Stainless Steel, Aluminium Gas cutting works are also undertaken.

★

OUR MOTTO IS TO SATISFY OUR CUSTOMERS.

போன் நெ. 85206.

தந்தி : "AKILAM"



ஸ்ரீ ஜெயபாரதம் பிரம்பு நாற்காலிகள் பல் வருடங்களாக நாணயமாகவும், நயமாகவும், அழகாகவும், முதல் தரமான பிரம்பினாலும், ஊக்கமான உழைப்பினாலும், பொருத்தமான அளவினாலும், கண்ணைக் கவரும் பல ரக எனாமல் வர்ணங்களுடன் தங்கள் அழகான பங்களா, கார்டன், கிளப், ஆபீஸ், சினிமா, ஸ்டுடியோ முதலிய இடங்களுக்கு தங்கள் மனத்திருப்திக்கு ஏற்றவாறு தயாரித்துக் கொடுத்து வருகிறோம்.

காட்லாக் வேண்டுவோருக்கு இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

ஸ்ரீ ஜெயபாரதம் & கம்பெனி

(ரிஜிஸ்டர்ட் நெ. 174558)

182, ராயப்பேட்டை ஹைரோட்,

சென்னை-14

ANANDA PARVATHI PRESS, MADRAS-3.